ISSN : **2456-821X** **Vol. 5 Issue 2 Dec 2021**

புதிய அவையம்

---

## கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'வீரராஜேந்திரன்' காலத்தைய கல்வெட்டு

**முனைவர் ஆ.பிரபு,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்,

திருப்பத்தூர் மாவட்டம்.

---

திருப்பத்தூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் தடயங்கள் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2017ஆம் ஆண்டு திருப்பத்தூர் அருகிலுள்ள சந்திரபுரம் சுற்றுவட்டாரத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்குள்ள ஏரிக்கோடி என்ற இடத்தில் ஜெயக்குமார் என்பவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் நடுகற்கள் இருப்பதைக் கண்டறிந்து ஆவணப்படுத்தினோம். அங்கே கல்வெட்டு ஒன்றும் இருந்தது. அக்கல்வெட்டானது உடைந்த நிலையில் ஐந்து துண்டுகளாக வெவ்வேறு இடங்களில் சிதறிக்கிடந்தன. அவற்றை மீட்டு வரிசைப்படுத்திப் படி எடுத்துப் படிக்க முற்பட்டபோது நிலத்தின் உரிமையாளர் அதற்கு அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் தற்போது அவ்வூரில் உள்ள தன்னார்வலர்களின் உதவியோடு அந்தக் கல்வெட்டை ஆய்வு செய்தோம். ஏற்கனவே நாங்கள் வரிசைப்படுத்தி வைத்த கல்வெட்டில் ஒரு சிறு துண்டு காணப்படவில்லை. 4 அடி அகலமும் 5 அடி உயரமும் கொண்ட இக்கல்வெட்டில் 21 வரிகள் பொறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரியும் அடிக்கோடிட்டு அழகாக எழுதப்பட்டுள்ளன. அந்தக் கல்வெட்டை மாவுப்பூச்சு

மூலமாகப் படி எடுத்து வாசித்தோம். கிடைத்த விவரங்களை **முதுநிலைக் கல்வெட்டு அறிஞர் எஸ்.ராஜகோபால்** அவர்கள் உறுதிப்படுத்தினார்.

**கல்வெட்டு வாசகங்கள்**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரமே துணையாக (வு) ந் தியாகமே யணியாகவுஞ் செ
2. ங்கோலோச்சிக் கருங்கலி கடிந்து கூடல் சங்க (ம) துத் தாஹவ மல்ல
3. னை அஞ்சுவியத்து விக்கில (னை) யுஞ் சிங்கணனையு முடைபுற
4. ங்கண்டு மற்றவர் மஹாவியரையும் வஸ்து வாஹநமுங் கை
5. ய்க் கொண்டு இரண்டாமிசையலுங்குறித்த களத்தி நாவஹ
6. வமல்லனை யஞ்சுவித்து வேங்கை நன்நாடு மீட்டு தன்
7. வுடன் பிறந்த முன்நவர் விரதமும் முடித்து விஜைய ஸி
8. ஹாஸநத்து (உ) லகுமுழுதுமுடையாளொடுவீற்றிந்த
9. ளின கோவிராஜ கேசரி வர்ம உடையார் ஸ்ரீ வீர ராஜேந்திர
10. வற்கு யாண்டு ஏழாவது விஜெய ராஜேந்திர மண்டலத்துத்
11. தகடூர் நாட்டோடு மி நாட்டுச் சந்திரபுரமாந அருமொழிதேவச் சதிர்வ்வே
12. திமங்கலத்திருக்கும் ஊர் முதலி துக்கையந் பள்ளிகொண்
13. டாந் ரா(ஜேந்திர) சோழசுவாமி ஸேநாதிபதிகள் மஹாவலியும்
14. ……டி சோழ தெசம் புறமலை நாடெறிந்து
15. …….மாகிவருகிற இடத்துப் பொருதுபட்டாந் இவ்வேரிகெல்
16. ……..தச் சோழ சமித்திரமெநப் பேரிட்டு ஆற்றுக் கால்கல்
17. ………தாணியெந்று பேரி(ட்)டு ஏரிகீழ்பூமி திருத்தி இவ்வூற்
18. …மீபவாமுடைய மஹாதேவற்கு முன்னூறுகுழி தேவதா

***19. ...ட் டாந் இ... இறக்குவாந் கங்கையிடைக் குமரியிடை***

***20. ........செயித பாபத்திற் படுவாந் இய்தெய் வளர்த்தாந் திருவடி***

***21. யெந்தலைமேலின.***

***காலம்***

*வீரராசேந்திர சோழனின் எழாவது ஆட்சியாண்டு – பொ.ஆ 1070*

***மெய்க்கீர்த்தி***

*“வீரமே துணையாக தியாகமே அணியாக...”*

***கல்வெட்டுச் செய்திகள்***

*வீரராஜேந்திர சோழனின், “வீரமே துணையாக” என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூடல் சங்கமம் என்ற இடத்தில் ஆகவமல்லன் என்ற சாளுக்கிய மன்னனை வென்று அவனுடைய மனைவியர், சொத்துக்கள், வாகனங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றிய செய்தியும்; விக்கலன், சிங்கணனை வென்ற செய்தியும், வேங்கை நாட்டைக் கைப்பற்றி தனது முன்னோர்கள் நினைத்ததை நிகழ்த்தி முடித்ததையும் வீரராஜேந்திர சோழனின் இம்மெய்க்கீர்த்தி விவரிக்கின்றது.*

*இக்கல்வெட்டு வீரராஜேந்திர சோழனின் ஏழாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1070) பொறிக்கப்பட்டதாகும். கல்வெட்டில் இவ்வூர் சந்திரபுரம் என்றே குறிப்பிடப்படுகின்றது. இவ்வூர் விஜயராஜேந்திர மண்டலத்தில் தகடூர்(தற்போதைய தர்மபுரி) நாட்டில் இருந்துள்ளது. இவ்வூர் நான்கு வேதமறிந்த பிராமணர்களுக்கு வழங்கப்பட்டு, ‘சந்திரபுரமான அருமொழித்தேவ சதுர்வேதிமங்கலம்’ என்று வழங்கப்பட்டது. இவ்வூர்த்தலைவன் ’முதலி துக்கையன் பள்ளிகொண்டான்’ என்பவன் அளித்த தர்மத்தைக் குறிக்கின்றது.*

வீரராஜேந்திர சோழனின் சேநாபதி மாவலி மும்முடிச் சோழதேசத்து புறமலை நாட்டின் மீது போர்தொடுத்து வந்தபோது இறந்ததாகத் தெரிகிறது. அவனைச் சிறப்பிக்க இவ்வூரில் இருந்த ஏரிக்கு 'ராஜேந்திர சோழன் ஏரி' எனப்பெயரிட்டுள்ளது. இந்தஏரிக்கு வரும் நீர் வரும் ஆற்றுக்கும் '.....தாணி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஏரியின் கீழ் உள்ள நிலத்தினைச் செம்மைப்படுத்தி விளைநிலமாக்கி 300 குழியினை (இன்றைக்கு43,000 சதுர அடி) இவ்வூரில் உள்ள கோவிலுக்கு தேவதானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை துக்கையன் பள்ளிகொண்டான் என்பவன் வழங்கியுள்ளான்.

இந்த தர்மத்தைக் கெடுப்பவர்கள் 'கங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவத்திடை போகக் கடவாராக' என்றும் இந்த தர்மத்தைக் காத்து வளர்ப்பவர்கள் திருவடிகளைத் தலைமீது வைத்துப் போற்றப்படுவர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குள்ள நடுகல்லுக்கும் இக்கல்வெட்டு வாசகங்களுக்கும் உள்ள தொடர்பு இதன் மூலம் அறிய முடிகின்றது. நடுகல்லில் போர்க்களக் காட்சிகள் மிக நேர்த்தியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டில் குறிக்கப்ப்டும் போர்ச் செய்தியினை இந்நடுகல்லில் உள்ளவற்றோடு பொறுத்திப் பார்க்க உகந்ததாக உள்ளது. வீரராஜேந்திரனின் தளபதி மகாபலிக்கு எடுக்கப்பட்ட நடுகல்லாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

மிகச்சிறந்த வரலாற்றினை விவரிக்கும் இக்கல்வெட்டில் 'சந்திரபுரம்' என்ற பெயர் 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்துள்ளதையும், தகடூர் நாட்டின் அங்கமான புறமலை நாட்டில் இருந்த ஊர் இதுவென்றும் அறிய முடிகின்றது. சோழ மன்னன் வீரராஜேந்திரன் குறித்த வரலாற்றுத் தகவல்களை இக்கல்வெட்டு விவரிக்கின்றது. இத்தகு வியப்புக்குரிய வரலாற்றுத் தலவல்களையும் திருப்பத்தூர் மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பினையும் விவரிக்கும் இக்கல்வெட்டு ஆவணம் உடைந்து அழிவுறும் நிலையில் உள்ளது.



நடுகல்

***சான்று:***



கல்வெட்டு